பக்ஷிராஜாவின்
மரகதம்
புரொட்யூஸர் & டைரக்டர்
S.M. ஸ்ரீராமுலு நாயுடு
BAKTHA

கதை	... T. S. D. சாமி
வசனம்	... முரசொலி மாறன், M.A.
பாடல்கள்	... யோகி சுத்தானந்த பாரதியார் பாபநாசம் சிவன் ரா. பாலு கு. மா. பா. மருதகாசி
இசையமைப்பு	... சுப்பையா நாயுடு
பின்னணி இசை	... டி. எம். சௌந்திரராஜன் ஜெயலக்ஷ்மி லீலா ஜமுனாராணி
நடன அமைப்பு	... ஹீராலால்
மேக்கப்	... குமார் தனகோடி
ஒலிப்பதிவு	... இ. ஐ. ஜீவா மணி
எடிடிங்	... வேலுசாமி
புரொடக்ஷன்	... எம். கே. ஆர். நாயர்
உதவி டைரெக்ஷன்	... ரா. பாலு
உதவி ஒளிப்பதிவு	... வி. தேவராஜ்
ஒளிப்பதிவு	... சைலன் போஸ்

திரைக்கதை, தயாரிப்பு & டைரக்ஷன்

எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு

கோவை பக்ஷிராஜா ஸ்டூடியோவில்

தயாரித்தது.

நடிகர்கள்

சிவாஜி கணேசன்	...	*வரேந்திரன்* *வளவன்*
டி. எஸ். பாலையா	...	*இகலமார்த்தாண்டன்*
சந்திரபாபு	...	*குண்டோதரன்*
எஸ். பாலசந்தர்	...	*மாரமார்த்தாண்டன்* *அனந்தரன்*
டி. எஸ். துரைராஜ்	...	*பிஞ்சகன்*
ஓ. ஏ. கே. தேவர்	...	*உக்ரமசிங்கன்*
சந்தானம்	...	*துபாஷ்*
பக்கிரிசாமி	...	*விஸுவாஸதாஸன்*
நாராயண பிள்ளை	...	*அமர குரு தேசிகர்*
கன்னையா	...	*கிரிகரன்*
நடராஜன்	...	C. I. D. *இன்ஸ்பெக்டர்*

கரீம், ஆறுமுகம், ரத்னவேல், வெள்ளிங்கிரி,
இப்ரஹீம் மற்றும் பலர்.

நடிகைகள்

பத்மினி	...	*மரகதம்* *அலமு*
சந்தியா	...	*கற்பகவல்லி*
முத்துலக்ஷ்மி	...	*விலோசனை*
ஞானம்	...	*மாணிக்கவல்லி*
லக்ஷ்மிப்ரபா	...	*அஞ்சனவதி*
லக்ஷ்மிராஜம்	...	*மாதவி*
காமாட்சி	...	*வேலாயி*

நடனம்

லக்ஷ்மிராஜம் & பேபிசரஸ்வதி

மரகதம்

(கதைச் சுருக்கம்)

வரேந்திரன் :

இயற்கைவளம் காண வந்த என்னை மீட்புப் பணத்திற்கு ஆசைப் பட்டு கொள்ளைத் தலைவன் உக்ரமசிங்கன் கைது செய்திருக்கா விட்டால், அந்தக் கள்வனோடு வாதாடி என் உயிரைக் காப்பாற்றிய அந்த அலமு என்னும் அழகு மயிலைச் சந்தித்திருக்க முடியுமா ?

எதிர்பாராத வகையில் என் உயிரைக் காப்பாற்றிய அவளது இல்லத்திலேயே நானும் எதிர்பாராத வகையில் தங்க நேர்ந்தது. பிறகு கேட்க வேண்டுமா? நானும் அலமுவும் பாலும் நீரும்போல் பிரியா உறவு கொண்டோம்.

அந்தப் பளிங்குச் சிலையே என் வாழ்க்கைத் துணை என்ற முடி வோடு, அவள் தந்தை அனந்தரரின் அனுமதி வாங்க அவரை அணுகினேன்.

ஆனால் அவரோ, தன் அருமை மகள் காலமெல்லாம் கன்னிப் பெண்ணாகவே வாழ்வதற்கு சபிக்கப்பட்டவள் என்று கண்டிப்பாகக் கூறி மறுத்துவிட்டார். என்செய்வேன் ! என் எண்ணக் கோட்டை கள் இடிந்து தரைமட்டமானாலும், மணந்தால் அலமுவைத்தான் மணப்பது என்ற ஒரே முடிவோடு வாட்டத்தின் வாரிசாக தாயகம் திரும்பினேன்.

அலமு :

அவர் மட்டும் தனியாகவா திரும்பினார், இல்லை. என் இதயத் தையும் கூட அல்லவா எடுத்துச் சென்றுவிட்டார். அவர் பிரிவால் கண்ணீரும் கம்பலையுமாக நின்ற என்னிடத்தில் அப்பா அந்தக் கதை யைச் சொன்ன பிறகுதான் எங்கள் திருமணத்திற்கு சம்மதம் தர அப்பா ஏன் மறுத்தார் என்ற காரணத்தை தெரிந்துகொண்டேன்.

ஆமாம் ; என் தந்தை சாதாரணக் குடியானவரல்ல. கருங்குயில் குன்றத்து ஜெமீனுக்கு வாரிசான மாரமார்த்தாண்டர். ஆனால்

அப்போதய மகாராஜாவான அவருடைய தமயனுரை யாரோ கொலை செய்துவிட்டு அவர்மீது அந்தப் பழியை சுமத்திவிட்டனர். நீதியின் கண்கள் குருடாக்கப்பட்டதால் மரண தண்டனை விதிக்கப்பட்ட என் தந்தை என் தாயாரும் அருங்கிளிபுரத்து ராணியுமான கற்பகவல்லி யின் உதவியினுல் உயிர் தப்பி, யாருக்கும் தெரியாமல் மரகதவல்லி என்ற பெயரோடு சிறுமியாய் இருந்த என்னையும் எடுத்துக்கொண்டு இந்த இலங்கைத் தீவுக்கு ஓடிவந்துவிட்டார்.

அந்தச் சிங்களத் தீவுதான் எங்களுக்குப் பாதுகாப்பான இடம் என்று நினைத்துக்கொண்டிருந்த அந்த நேரம்தான் அந்தக் கொள் ளைக்கார உக்ரமசிங்கன் என்னைக் கடத்திச் செல்ல முயன்ருன்.

நல்ல வேளை ; அந்த நேரம் அப்பா வந்து தடுத்திருக்காவிட்டால் விளைவு விபரீதமாயிருந்திருக்கும்.

இனி இங்கிருப்பது ஆபத்து என்று கருதிதான் நாங்கள் உடனடி யாகப் படகிலேறி தப்ப முயன்ரும். ஆனுல் உக்ரமசிங்கனே எங்களைத் துரத்தி வந்தான். என் சொல்வேன். உயிருக்கு பயந்து நானும் அப்பாவும் கடலில் குதித்தோம். ஒருவரை ஒருவர் பிரிந்தோம்.

பிறகு கண் விழித்துப் பார்த்தபோது ஒரு பெண்மணியின் கப்பலி லிருக்கக் கண்டேன். யார் அந்தப் பெண்மணி ?

வேறு யாருமல்ல, நான் இறந்துவிட்டதாக நினைத்துக்கொண் டிருக்கும் அருங்கிளிபுரத்து ராணி கற்பகவல்லிதான் அது.

என்னை யாரென்று தெரிந்துகொள்ளாவிட்டாலும் நான் மரகதம் போல இருக்கிறேனென்று என் தாய் என்மீது அன்பு மழையைச் சொரிந்தார்கள்.

அங்கே என் உள்ளம் கவர் கள்வன் யுவராஜா வரேந்திரரைப் பார்த்தபிறகும் என் ஆனந்தத்திற்குக் கேட்க வேண்டுமா ? ஆனுல் என் தந்தை ?

அனந்தரர் :

கடலிலிருந்து மீனவர்களால் காப்பாற்றப்பட்ட நான் என்மகள் தாயிடமே போய்ச் சேர்ந்த செய்தி அறிந்து, விருந்தினராக அவர்கள் தங்கி இருக்கும் கருங்குயில் குன்றம் சென்றேன்! எந்த அரண்மனை யில் நான் அரசராக உலவ வேண்டுமோ அதே அரண்மனைக்குள் நான் யாருக்கும் தெரியாமல் மறைந்து சென்று என் அலமுவைக் கண்டேன்!

ஆனல் அவள் சொன்ன செய்தியோ எனக்கு ஒரே ஆச்சரியத்தைக் கொடுத்தது.

முன்பு கடனாளியாக வந்து என் சகோதரனிடம் தஞ்சம் புகுந்து, இப்போது அரசராக இருக்கும் இகலமார்த்தாண்டனை முன்னைய சிற்றுள் பிஞ்சகன் இப்போது ஒரு பொம்மையைப்போல் ஆட்டி வைக்கிருனும். மேலும் அவன் ஒரு இருட்டுக் குகையில் முன்பு அரசர் விற்றுவிட்டதாக சொல்லப்பட்ட விலே உயர்ந்த வைரங்களை மறைத்து வைத்திருக்கிருனும்! இதை என் அலமுவே அவனைப் பின் தொடர்ந்து நேரில் பார்த்தாளாம்.

ஆமாம். இப்போதுதான் எனது குற்றமற்ற தன்மை நிருபண மாகும் என்பதிலே எனக்கு நம்பிக்கை வந்திருக்கிறது. அப்படி யாஞல் அரசரைக் கொன்றது?

பிஞ்சகன் :

சந்தேகமென்ன? எல்லாம் நாங்க செஞ்ச சதிதான். அந்த அலமுக் குட்டிக்கு ஒரு அப்பன் இருக்கிருன்கிறப்பவே சந்தேகப் பட்டேன். அந்தப் பொண்ணு மரகதமாத்தான் இருக்கணும்னு, நேத்தி நேராவே மாரமார்த்தாண்டரைப் பார்த்தபிறகு சும்மா இருக்கலாமா? நான் ராஜாவாக்குனேனே அந்த இகலமார்த்தாண்ட ரைக் கலந்தேன். அவ்வளவுதான். அவனைப் பார்க்க அந்த மலைப் பக்கம் அலமு நின்னு! அவ்வளவுதான். பூனைமாதிரி அவ பின்னடி போய் அவளை அப்படியே மலை உச்சியிலிருந்து புடிச்சித் தள்ளி விட்டுட்டேன்.

பிறகு—

அலமு என்ன ஆனுள் ?
அவள் தந்தையின் மீதுள்ள பழி நீக்கப்பட்டதா ?
அவள் கொண்ட காதல் கைகூடியதா ?
சிதைந்துபோன அவர்கள் குடும்பம் ஒன்று சேர்ந்ததா ?
குற்றம் செய்பவர்களுக்கு தண்டனையும்
நல்லவர்களுக்கு நியாயமும் கிடைத்ததா ?

விடை

வெள்ளித்திரையில்

பாட்டு 1

பா : டி. எம். சௌந்திரராஜன் இயற் : ரா. பாலு

(தொகையரு)

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று
ஓதி உணர்ந்தோம் ஒப்பிலா புகழ் கொண்டோம்

பல்லவி

காவிரி பாயும் கன்னித் தமிழ்நாடு
கலைகளுக் கெல்லாம் தாய் வீடு

அநுபல்லவி

காவியம் புகழும் சிறந்த பண்பாடு
காப்பதில் நமக்கு உண்டோ ஈடு (காவிரி)

சரணங்கள்

விண்ணை மறைத்திடும் கோபுரமே நம்
வித்தையைக் காத்திடும் ஓவியமே
எண்ணில் அடங்கா இலக்கியமே
இயல் இசை நாடகம் நிலைக்களமே (காவிரி)

கொல்லாமை பொய்யாமை நெறிகண்டே
குறள் எனும் அமுதாம் தேன் உண்டே
சொல்லும் செயலும் ஒன்றெனவே
வாழ்வது உலகில் தமிழினமே
காவிரி பாயும் கன்னித் தமிழ்நாடு
கலைகளுக் கெல்லாம் தமிழ்நாடு - தமிழ்நாடு-
தமிழ்நாடு

பாட்டு 2

பா: டி. எம். சௌந்திரராஜன் — இயற்: பாபநாசம் சிவன்
ஜெயலெக்ஷ்மி

வரேந்திரன் — அலமு

ஆண்: புன்னகை தவழும் மதிமுகமோ
வெண்ணிலவுமிழும் நிறைமதியோ—மதி மயக்கும்
புன்னகை தவழும் மதி முகமோ
என்னுளாம் கவர்வேதன் கைவரிசையோ
எழிலன்னை பரிசோ பல் வரிசையோ (புன்னகை)

பெண்: எனதுள்ளம் இன்றென்னவோ—தனியே
இன்புற்று அலைகின்றதே
தினமுள்ள மலர் சோலையே—இதைக் கண்டு
சிந்தை சுழல்கின்றதே

மனமிங்கு விளையாடலை—விரும்பமல்
தனிமையே வேண்டுதடி
கனவில் நடப்பதுபோல்—காண்பதெல்லாம்
கணத்தில் மறையுதடி

பாங்கியே நீ விரைந்து வாராயடி—இந்த
விந்தையைப் பாராயடி—எந்தன்
வடிவந்தனை வரைந்த தாரோ—இதைக்
கண்டென் மனமே மயங்குதடி

ஆண்: எனதுள்ளம் இன்றென்னவோ—தனியே
இன்புற்று அலைகின்றதே
தினமுள்ள மலர் சோலையே—இதைக் கண்டு
சிந்தை சுழல்கின்றதே

மனமிங்கு விளையாடலை—விரும்பாமல்
தனிமையை வேண்டுதடா
கனவில் நடப்பதுபோல்—காண்பதெல்லாம்
கணத்தில் மறையுதடா

பார்க்க பார்க்க திகட்டாத உன் அழகைப்
பருக பசி தீருமே
கேட்க கேட்க அலுக்காத உந்தன் உயர்
கீதம் அமுதம் நேருமே.
பாலும் நீரும் போல் பிரியா உறவே
பாரில் பெரும் ஆனந்தம்.

பெண் : பக்குவம் அடையாத பதம் பெறக் காயாத
பாலுக்கு சுவையேது.

இருவ : பாலும் நீரும்போல் பிரியா உறவே
பாரில் பெரும் ஆனந்தம்.

பாட்டு 3

அலமு

காவா வா கந்தா வாவா எனைக்
காவா வேலா வா
முருகா வாவா கந்தா வாவா
எனைக் காவா வேலா வா
ஷண்முகா வா கந்தா வாவா
எனைக் காவா வேலா வா
பழனி மலை உறையும்
முருகா வாவா கந்தா வாவா
எனைக் காவா வேலா வா

பாட்டு 4

பா : ஜெயலெக்ஷ்மி இயற் : யோகி சுத்தானந்தபாரதி

அலமு

பல்லவி

மாலை மயங்குகின்ற நேரம்—பச்சை
மலை வளரும் அருவியோரம்

அநுபல்லவி

காலைக் கமல மலர் போல முகமலரைக்
கண்டேன் காதல் கொண்டேன்

சரணங்கள்

1. நெஞ்சம் துடிதுடிக்க நின்றேன்—இரு
நீலக் கருவிழியால் வென்றான்
கொஞ்சும் குயிலுடனே கெஞ்சும் எனை அணைத்த
குமரன் அவன் அமரன் (மாலை)

2. எட்டிப் பறந்து செல்லும் மின்போல்—எங்கோ
ஏகிப் பறந்து வந்தான் முன்போல்
கட்டிப் பிடித்தினி நான் விட்டுப் பிரிவதில்லை
கண்ணே என்றான் கண்ணன் (மாலை)

3. உடலும் உயிரும் என வாழ்வோம்—இந்த
உலகம் செழிக்க நலம் சூழ்வோம்
கடலும் கதிருமெனக் களித்து மகிழும் எங்கள்
கருத்தில் இன்பம் நிலவும் (மாலை)

பாட்டு 5

பா: டி. எம். சௌந்திரராஜன் இயற்: ரா. பாலு
ஜெயலெக்ஷ்மி

வரேந்திரன் — அலமு

ஆண்: கண்ணுக்குள்ளே உன்னைப்பாரு—அது
காவியம் ஆயிரம் கூறும்—எந்தன்
கண்ணுக்குள்ளே உன்னைப்பாரு

பெண்: எண்ணத்திலே எழில் வண்ணத்திலே
மின்னித் திரிகின்ற வெண்ணிலவில்
உன்னைத் தினம் தினம் காண்கிறேன்—அந்த
உணர்ச்சியில் உலகினை மறந்தேன்

ஆண்: கண்ணுக்குள்ளே உன்னைப் பாரு—அது
காவியம் ஆயிரம் கூறும்

இன்பத்தின் எல்லையில் கூடுகட்டி—அதில்
இன்னிசை பாடும் பறவைகள் நாம்

பெண் : அன்பினில் பொங்கும் கடல்போலே—ஆசை
அலைகளை வீசிடும் கலையமுதே
கண்ணுக்குள்ளே உன்னைப்பாரு

ஆண் : ஓடும் அருவியாய் நானிருக்க—அங்கு
ஓடிடும் மீன்போல் துள்ளி வந்தாய்

பெண் : பாடும் குயிலென நானிருக்க—அங்கு
ஆடும் மயிலென நீயும் வந்தாய்

இருவ : கண்ணுக்குள்ளே உன்னைப்பாரு—அது
காவியம் ஆயிரம் கூறும்

பாட்டு 6

பா : லீலா, ஜமுனாராணி — **இயற் :** மருதகாசி

பெண்கள் நடனம்

ஓஹோ..............

பச்சைக்கிளிபோல பவளச்சரம்போல
பருவ அழகு ஜொலி ஜொலிக்க—நாங்க
பாடுவதும் ஆடுவதும் பார்த்து ரஸிக்க—நீங்க
பார்த்து ரஸிக்க

கொச்சி மஞ்சள் பூசி முகமினுக்கி
குங்குமப் பொட்டு வச்சி சீவிசினுக்கி
கொண்டையில் ஜாதி மல்லிபூவு சிரிக்க
வந்திருக்கோம் நாங்க விருந்தளிக்க—கண்ணுக்கு
விருந்தளிக்க

தங்கத்தளிர் மேனி பளபளக்க
தண்டைகளும் காலில் சலசலக்க
சந்தன வாடை இங்கு கமகமக்க
வந்திருக்கோம் நாங்க விருந்தளிக்க—கண்ணுக்கு
விருந்தளிக்க

பச்சைக் கிளிபோல பவளச்சரம்போல
பருவ அழகு ஜொலி ஜொலிக்க—நாங்க
யாடுவதும் ஆடுவதும் பார்த்து ரஸிக்க

பாட்டு 7

அடமு

பா : ஜெயலெக்ஷ்மி இயற் : ரா. பாலு

பல்லவி

ஆடினள்—நடனம் ஆடினள்
அமுதத் தமிழ் மொழியில் அழகுற இசைபாடி (ஆடி)

அநுபல்லவி

நாடி நான் அலைந்த நற்கலைப் பொருள் எல்லாம்
நளின வளைவு கொள்ளும்
நயமுறும் விழிகளில் வியந்திடும் இனிமைதர (ஆடி)

சரணங்கள்

1. தாளக் கட்டுகள் கூட்டி சதங்கை ஒலி குலுங்க
தையல் ஒருவனிடம் மையல் கொண்டவள் என்றே
நீள உடல் அசைத்து நித்திரை யில்லாது
நித்த நித்தம் நினைந்து
சித்தம் உருகி விழிசோர்ந்திட மனம் ஏங்கிட (ஆடி)

2. காலை மடக்கத் திறன் கைகளின் விரல் நீட்டி
களைமிகும் வதனத்தில் கற்பனை நயம்காட்டி
வேலைப் பிடிக்கும் எழில் வீர உருவம் தீட்டி
விந்தை உடலசைவில்
சூரரை வீழ்த்திய வீரமெல்லாம் காணவே (ஆடி)

3. தாமரை மலர்காட்டத் தன்கரம் குவித்தே
தாவிடும் வண்டு அதில் மேவும் தேன் சுவைத்ததும்
காமனை எரித்திட்ட கனல் பொழியும் உருவம்

கயிலைப் பதியின் நடனம் விளங்க
பிறை சூடிடும் பெருமான் எனவே
ஆடினாள் நடனம் ஆடினாள்

பாட்டு 8

பா : சந்திரபாபு, ஜமுனா ராணி இயற் : கு. மா. பா.

குண்டோதரன் — மாதவி

ஆண் : குங்குமப் பூவே—கொஞ்சும் புறாவே
தங்கமே உன்னைக் கண்டதும் இன்பம்
பொங்குது தன்னாலே

பெண் : போக்கிரி ராஜா போதுமே தாஜா
பொம்பிளெகிட்ட ஜம்பமா வந்து
வம்புகள் பண்ணாதே
தந்தனத் தானா சிந்துகள் பாடி
தந்திரம் பண்ணாதே —
மந்திரத்தாலே மாங்காயைத் தானே
பறிக்க எண்ணாதே

ஆண் : ஜம்பரு பட்டும் தாவணிக் கட்டும்
சல சலக்கையிலே
என் மனம் கெட்டு ஏக்கமும் பட்டு
என்னமோ பண்ணுதடி

பெண் : சித்திரப் பட்டு சேலையைக் கண்டு
உனக்குப் பிரியமா—நீ
பித்துப் பிடிச்சு பேசுறதெல்லாம்
எனக்குப் புரியுமா

ஆண் : சந்தனப் பொட்டும் சம்பக மொட்டும்
சம்மதப் பட்டுக்கணும்
தாளமும் தட்டி மேளமும் கொட்டி
தாலியைக் கட்டிக்கணும்
குங்குமப் பூவே—கொஞ்சும் புறாவே
தங்கமே உன்னைக் கண்டதும் இன்பம்
பொங்குது தன்னாலே

Vadapalani Press, Madras-26.

எமது அடுத்த தயாரிப்பு

பக்ஷிராஜாவின்

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்

புரொட்யூஸர்
டைரக்டர்

S.M. ஸ்ரீராமுலு நாயுடு

BAKTHA